# பிறந்தநாள் வாழ்த்து! - 01-10-2021

## திரு சகாபுதீன் அவர்களுக்கு!

இறைவன் என்னும் தலைவன்;
இயைந்து நடத்தும் வாழ்வில்,
இனியதாய் மானுடம் பேணும்,
இயன்நிலை அன்பின் தூவல்!

கனவுகள் மனத்தில் எழுத,
களங்கள் பலவும் தேடும்மனம்;
கனிவுடன் காலம் எண்ணி,
கருத்துடன் அகவை செய்யும்!

கண்டதாம் பிறந்த நாளை,
கனிவுடன் இன்றென வாய்!
கனிவுசேர் அன்பில் தோய்ந்து,
களம்பலவும் வென்று வாழ,

இனியவன் இறைவன் தானே,
இன்பமாய் அருளும் செய்ய,
இனிய நாளிதனில் அவனை,
இன்பமுடன் வேண்டுவேனே!

*கு.ப. அசோகன்,*
01-10-2021